OL/2015/12-T-I,II

55388

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka Department of Examinations, Sri Lanka

**12 T I, II**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2015 දෙසැම්බර්
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2015 டிசெம்பர்
**General Certificate of Education (Ord. Level) Examination, December 2015**

| | | |
|---|---|---|
| ශෛවනෙරි | I, II | පැය තුනයි |
| **சைவநெறி** | **I, II** | **மூன்று மணித்தியாலம்** |
| Saivaneri | I, II | *Three hours* |

## சைவநெறி I

**கவனிக்க :**
(i) **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.
(ii) **1** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்க.
(iii) **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (×) இடுக.**
(iv) அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, பின்பற்றுக.

1. எல்லாக் காரியங்களுக்கும் முதலில் வணங்கப்படும் கடவுள்
   (1) முருகன் (2) பிள்ளையார்
   (3) ஐயனார் (4) வீரபத்திரர்

2. இலங்கையில் தோன்றிய தலமகிமை கூறும் தல புராணங்களுள் ஒன்று
   (1) சிவராத்திரி புராணம் (2) ஏகாதசிப்புராணம்
   (3) திருக்கரைசைப் புராணம் (4) கந்தபுராணம்

3. கேதார கௌரி விரதம் அனுட்டிக்கப்படுவது
   (1) பங்குனி மாதத்தில் வரும் உத்தர நட்சத்திரத்துடன் கூடிய பௌர்ணமி நாளில் ஆகும்.
   (2) புரட்டாதி மாத சுக்கிலபட்ச அட்டமி முதல் கிருஷ்ணபட்ச சதுர்த்தசி ஈறாகிய இருபத்தொரு நாட்களில் ஆகும்.
   (3) கார்த்திகை மாதத் தேய்பிறைப் பிரதமை தொடக்கம் மார்கழி மாத வளர்பிறைச் சஷ்டி வரையுள்ள இருபத்தொரு நாட்களில் ஆகும்.
   (4) ஐப்பசி மாதத் தீபாவளி அமாவாசையை அடுத்து வரும் வளர்பிறையில் பிரதமை தொடக்கம் சஷ்டி வரையுள்ள ஆறு நாட்களில் ஆகும்.

4. 'வாழி திருநாவலூர் வன்றொண்டர் பதம் போற்றி' என்பதில் குறிப்பிடப்படும் நாயனார்
   (1) திருநாவுக்கரசு நாயனார் (2) சுந்தரமூர்த்தி நாயனார்
   (3) மாணிக்கவாசக சுவாமிகள் (4) திருமூலதேவர்

5. தக்கன் மகளாக தட்சாயினி அவதரித்த திருநாள்
   (1) பங்குனித் திங்கள் (2) மாசி மகம்
   (3) பங்குனி உத்தரம் (4) தைப்பூசம்

6. அருணந்தி சிவாச்சாரியர் இயற்றிய நூல்
   (1) உண்மை விளக்கம் (2) திருவருட்பயன்
   (3) சிவஞான சித்தியார் (4) சிவஞானபோதம்

7. நினைக்க முத்தி தரும் சிவத்தலம் எது?
   (1) சிதம்பரம் (2) காசி
   (3) திருவாரூர் (4) திருவண்ணாமலை

8. 'சுத்தாத்துவித சைவசித்தாந்தம்' என்னும் தத்துவக் கருத்தினை முதலில் முன்வைத்தவர்
   (1) அச்சுதகளப்பாளர் (2) மெய்கண்ட தேவர்
   (3) அருணந்தி சிவாச்சாரியர் (4) மறைஞானசம்பந்தர்

[பக். 2 ஐப் பார்க்க

9. இறைவன் குடிகொண்டிருக்கும் தலங்கள் தூய்மையுடன் இருக்கவேண்டுமென எண்ணி, செல்லுமிடமெல்லாம் திருத் தொண்டுகள் புரிந்தவர்களுள் தலைமையிடத்தை வகிப்பவர் யார்?
(1) மெய்ப்பொருள் நாயனார் (2) சாக்கிய நாயனார்
(3) திருநாவுக்கரசு நாயனார் (4) கண்ணப்ப நாயனார்

10. யோகர் சுவாமிகளின் குரு
(1) நவநாதசித்தர் (2) செல்லப்பா சுவாமிகள்
(3) சித்தானைக்குட்டி சுவாமிகள் (4) பெரியானைக்குட்டி சுவாமிகள்

11. "மரக்கறி உணவு மனதிற்கு மகிழ்ச்சி" என்று உபதேசம் செய்தவர்
(1) கல்யாணகிரியார் (2) ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்
(3) முத்துலிங்க சுவாமிகள் (4) சித்தானைக்குட்டி சுவாமிகள்

12. "சொல்லிறந்து நின்ற தொன்மை" என்று மாணிக்கவாசகரால் கூறப்படுவது
(1) சிவனின் சிறப்பியல்பான சொரூப லக்கணமாகும்.
(2) சிவனின் பொதுவியல்பான தடத்த லக்கணமாகும்.
(3) ஆணவ மலத்தின் குணமாகும்.
(4) ஆன்மா அநாதி என்பதாகும்.

13. சிவனின் சகளத் திருமேனிகள் யாவை?
(1) சிவம், சக்தி, நாதம், விந்து (2) வாக்கு, வாயு, பாணி, பாதம்
(3) பிரம்மா, விஷ்ணு, உருத்திரன், மகேஸ்வரன் (4) நாதம், விந்து, ஈசுரம், சுத்தவித்தை

14. சைவநாற்பாதங்களில் சண்டேஸ்வரர் முத்தி பெற்ற நெறி
(1) சரியை (2) கிரியை
(3) யோகம் (4) ஞானம்

15. காலம், நியதி, கலை, வித்தை, அராகம், புருடன், மூலப்பிரகிருதி என்பன
(1) சிவதத்துவங்கள் (2) வித்தியா தத்துவங்கள்
(3) கன்மேந்திரியங்கள் (4) தன்மாத்திரைகள்

16. ஆன்மாக்கள் பிராரத்த வினைப்பயனை அனுபவித்து முடிந்தபின் அவை முத்திப்பேறு அடையும் வகையில் செய்யப்படுவது
(1) விசேட தீட்சை (2) அசத்தியோ நிர்வாண தீட்சை
(3) ஆசாரிய அபிடேகம் (4) அங்க தீட்சை

17. விஜயன் இலங்கைக்கு வந்தபோது இலங்கையின் நான்கு திசைகளிலும் ஐந்து சிவாலயங்கள் காணப்பட்டதாகக் கூறும் நூல்
(1) மகாவம்சம் (2) தீபவம்சம்
(3) சூளவம்சம் (4) யாழ்ப்பாண வைபவமாலை

18. "தீபாவளி தினத்தில் காலையில் இல்லங்களுக்கு வெளியே தீபங்களை ஏற்றி வைத்தால் இயமன் திருப்தியடைவான்" என்று கூறும் புராணம்
(1) கருட புராணம் (2) பத்ம புராணம்
(3) பவிஷ்யோத்தர புராணம் (4) விஷ்ணு புராணம்

19. யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை ஸ்தாபிக்கப்பட்ட இடம் எது?
(1) வண்ணார்பண்ணை (2) நல்லூர்
(3) திருநெல்வேலி (4) கந்தர்மடம்

20. சிவனைச் 'செம்மேனியெம்மான்' என்று பாடியவர்
(1) திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் (2) திருமூலதேவநாயனார்
(3) காரைக்காலம்மையார் (4) திருநாவுக்கரசு நாயனார்

21. கி.பி. 2 ஆம் நூற்றாண்டில் மாதோட்டத்துடன் வணிகத் தொடர்புகளைக் கொண்டிருந்தவர்கள்
(1) போர்த்துக்கேயர், இந்தியர், அமெரிக்கர் (2) உரோமர், பாரசீகர், அராபியர்
(3) ஜப்பானியர், பிரஞ்சுக்காரர், இந்தியர் (4) ஐரோப்பியர், இத்தாலியர், ஜேர்மானியர்

[பக். 3 ஐப் பார்க்க

22. இலங்கையில், முற்றிலும் கருங்கல்லினால் அமைக்கப்பட்ட ஒரே ஆலயம்
(1) பொன்னம்பலவாணேச்சரம்
(2) திருக்கோணேச்சரம்
(3) திருக்கேதீச்சரம்
(4) மாமாங்கப் பிள்ளையார் ஆலயம்

23. கண்ணகி வழிபாடு எங்கிருந்து காரைதீவுக்கு வந்தது?
(1) கல்முனையிலிருந்து
(2) யாழ்ப்பாணத்திலிருந்து
(3) திருகோணமலையிலிருந்து
(4) வீரமுனையிலிருந்து

24. அருணந்தி சிவாச்சாரியரின் மாணவர்களுள் ஒருவர்
(1) மெய்கண்டதேவர்
(2) உமாபதிசிவாச்சாரியர்
(3) மறைஞான சம்பந்தர்
(4) அச்சுதகளப்பாளர்

25. நாம் அதிகாலையில் நித்திரைவிட்டெழுந்ததும் முதலிற் செய்யவேண்டியது
(1) சூரிய நமஸ்காரம் செய்தல்
(2) வீட்டைக் கூட்டிப் பெருக்குதல்
(3) சிவ சிவ என உச்சரித்தல்
(4) நீராடுதல்

26. சைவ சமயிகள் குழந்தைக்கு முடியிறக்குதல், உணவு ஊட்டுதல் என்பவற்றைத் திருக்கோயில்களில் செய்வது
(1) நடைமுறைக்குப் பொருத்தமற்றது.
(2) பெண் குழந்தைகளுக்கு மட்டும் உரியது.
(3) சைவ சமயிகள் அனைவரும் பின்பற்றவேண்டியது.
(4) ஆண் குழந்தைகளுக்கு மட்டும் உரியது.

27. குரு வழிபட்டால் வீடுபேறு அடைந்தோரைக் கொண்ட தொகுதி எது?
(1) திருமூலர், குலச்சிறையார், அப்பூதியடிகள்
(2) சேரமான் பெருமாள், பூசலார், சாக்கிய நாயனார்
(3) இயற்பகையார், திருநீலகண்டர், சிறுத்தொண்டர்
(4) இளையான்குடிமாறனார், பூசலார், திருமூலர்

28. மூலவர் தென்திசை நோக்கியதாக அமைந்துள்ள முருகன் ஆலயம்
(1) நல்லூர் கந்தசாமி ஆலயம்
(2) மண்டூர் முருகன் ஆலயம்
(3) செல்வச்சந்நிதி முருகன் ஆலயம்
(4) மாவிட்டபுரம் கந்தன் ஆலயம்

29. "பொய்தீர் ஒழுக்க நெறி நின்றார் நீடு வாழ்வார்" என்று கூறியவர்
(1) ஔவையார்
(2) திருஞானசம்பந்தர்
(3) திருவள்ளுவர்
(4) மாணிக்கவாசகர்

30. சைவ சமயிகள் புனித தலங்களுக்கு யாத்திரை மேற்கொள்ளல்
(1) கேளிக்கை நோக்கிலானதாகும்.
(2) மனதிற்கு இன்பந்தருவதாகும்.
(3) காலத்தை வீணாக்கும் செயலாகும்.
(4) சிறப்பானதும் ஆன்மீகப் பயனுடையதுமாகும்.

31. சைவர்கள் உணவு உண்பதற்கு முன்னர் ஓத வேண்டிய தேவாரம்
(1) "நிலைபெறுமா றெண்ணுதியேல்..."
(2) "காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி..."
(3) "அன்னம் பாலிக்குந் தில்லைச்சிற் றம்பலம்..."
(4) "சொற்றுணை வேதியன்..."

32. திருமாளிகைத்தேவர் தொடக்கம் சேதிராயர் வரையுள்ள ஒன்பது அடியவர்கள் பாடிய பாடல்கள் இடம் பெற்றிருப்பது
(1) திருவிசைப்பாவில் ஆகும்.
(2) திருப்பல்லாண்டில் ஆகும்.
(3) பதினொராம் திருமுறையில் ஆகும்.
(4) எட்டாம் திருமுறையில் ஆகும்.

33. 'தென்னவன் பிரமராயன்' என்னும் பட்டம் பெற்றிருந்தவர் யார்?
(1) திருநாவுக்கரசு நாயனார்
(2) சுந்தரமூர்த்தி நாயனார்
(3) மாணிக்கவாசக சுவாமிகள்
(4) திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்

34. கொன்றை மரத்தைத் தலவிருட்சமாகக் கொண்ட திருத்தலம்
(1) ஒட்டுசுட்டான் தான்தோன்றீச்சரம்
(2) கொக்கட்டிச்சோலை தான்தோன்றீச்சரம்
(3) பறாளை விநாயகர் ஆலயம்
(4) நயினை நாகபூஷணி அம்மன் ஆலயம்

35. கண்ணகி வழிபாட்டில் பாராயணம் பண்ணப்படும் நூல்களைக் கொண்ட தொகுதி
(1) கண்ணகி வழக்குரை காவியம், சரஸ்வதி அந்தாதி, அபிராமி அந்தாதி
(2) மழைக்காவியம், தேவி பாகவதம், மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்
(3) சிலம்பு கூறல், கோவலன் கதை, கண்ணகி வழக்குரை காவியம்
(4) குளிர்த்திப்பாடல், தேவிமகாத்மியம், மாரியம்மன் தாலாட்டு

[பக். 4 ஐப் பார்க்க

55388

36. ஆகமம் **சாராத** வழிபாட்டை அழைக்கும் பெயர்களைக் கொண்ட தொகுதி
    (1) ஊர்த் தெய்வ வழிபாடு, பத்தினி வழிபாடு, சூரிய வழிபாடு
    (2) கிராமிய வழிபாடு, நாட்டார் வழிபாடு, சிறுதெய்வ வழிபாடு
    (3) குலதெய்வ வழிபாடு, நவக்கிரக வழிபாடு, எல்லைப்புற வழிபாடு
    (4) மாலைத் தெய்வ வழிபாடு, அக்கினி வழிபாடு, வருண வழிபாடு

37. வேளாண்மை நடவடிக்கை சார்ந்த தொழிற் சடங்குடன் தொடர்புடைய தொகுதி
    (1) ஏர்மங்கலம், முளைச் சடங்கு, பொலிச்சடங்கு
    (2) ஆயுத பூசை, மடை பரவுதல், நோற்புக்கட்டல்
    (3) வட்டச்சடங்குகள், கோயிற் சடங்குகள், கரகம் பாலித்தல்
    (4) தெய்வமாடல், குளிர்த்திப்பாடல், தீ மிதிப்பு

38. பாடசாலைகளில் மாணவர்கள் பின்பற்ற வேண்டிய சமயச் செயற்பாடுகளைக் கொண்ட தொகுதி எது?
    (1) எழுதும்போது பிள்ளையார் சுழி இடல், பூமாலை கட்டுதல், அமைதியாக இருத்தல்
    (2) காலைப் பிரார்த்தனையில் கலந்து கொள்ளல், உடற் பயிற்சியில் ஈடுபடல், கலை நிகழ்ச்சிகளில் பங்கேற்றல்
    (3) காலைப் பிரார்த்தனையில் கலந்து கொள்ளல், சுவாமி படங்களுக்கு மலர்தூவி விளக்கேற்றல், ஆசிரியர்களுக்கு எழுந்து நின்று வணக்கம் தெரிவித்தல்
    (4) இறை வழிபாட்டின் பின்பு திருநீறு தரித்தல், காலைப் பிரார்த்தனையில் கலந்து கொள்ளல், விளையாட்டுகளில் பங்குபற்றுதல்

● பின்வரும் அட்டவணையில் A இலிருந்து I வரையிலான தகவல்களின் உதவியுடன் 39 ஆம் 40 ஆம் வினாக்களுக்கான விடைகளைத் தெரிவுசெய்க.

| இலங்கைச் சித்தர்கள் | சமாதியடைந்த நட்சத்திரம் | சமாதியடைந்த ஆண்டு |
|---|---|---|
| A - யோகர்சுவாமிகள் | D - பங்குனி உத்தரம் | G - 1951 |
| B - நவநாதசித்தர் | E - ஆடிச்சுவாதி | H - 1964 |
| C - சித்தானைக்குட்டி சுவாமிகள் | F - பங்குனி ஆயிலியம் | I - 1902 |

39. சிவதொண்டன் நிலையத்துடன் தொடர்புடைய தொகுதி
    (1) ADI (2) AFH (3) BEG (4) CDH

40. அரசபோக வாழ்க்கையை வெறுத்து ஆன்மீக வாழ்வினை நாடி மட்டக்களப்பு காரைதீவில் சமாதியடைந்தவருடன் தொடர்புடைய தொகுதி
    (1) AFH (2) BDI (3) CEG (4) CFI

❋ ❋

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

12 T I, II

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2015 දෙසැම්බර්
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2015 டிசெம்பர்
General Certificate of Education (Ord. Level) Examination, December 2015

ශෛවනෙරි I, II
சைவநெறி I, II
Saivaneri I, II

## சைவநெறி II

* **முதலாம்** வினாவும் **இரண்டாம்** வினாவும் உட்பட **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
* முதலாம் வினாவின் விடைக்கு **20** புள்ளிகளும் இரண்டாம் வினாவின் விடைக்கு **16** புள்ளிகளும் ஏனைய ஒவ்வொரு வினாவின் விடைக்கும் **8** புள்ளிகள் வீதமும் வழங்கப்படும்.

**1.** மேல்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை எழுதுக.

(i) 'கடவுள்' என்ற சொல்லின் பொருள் யாது?

(ii) இறைவனுக்குரிய எண்குணங்களுள் **இரண்டினைத்** தருக.

(iii) 'விப்ரநாயனார்' என்று அழைக்கப்பட்டவர் யார்?

(iv) சோழ மன்னர்களது காலத்தில் திருக்கோணேச்சரம் எப்பெயரில் அழைக்கப்பட்டது?

(v) இலங்கையிலுள்ள திருப்படைக் கோயில்கள் **இரண்டினைத்** தருக.

(vi) 'மாதோட்டம்' என அழைக்கப்படும் திருத்தலம் எது?

(vii) தந்தையை இழந்தவர்கள் நோற்கும் விரதம் யாது?

(viii) தைப்பூசத்தை விசேட நாளாகக் கொண்டு மேற்கொள்ளப்படும் நற்செயல்கள் **இரண்டினை** எழுதுக.

(ix) "ஒரு பொருளும் காட்டா(து) இருளுருவங் காட்டும்
இரு பொருளும் காட்டா(து) இது."
இதில்வரும் 'இது' என்பது எதனைக் குறித்து நிற்கின்றது?

(x) சைவ சமயத்தின் சிறப்பு இலட்சணங்கள் **மூன்று** தருக.

**2.** (i) மேல்வரும் பாடல்களுள் **இரண்டினை** அடிமுறை பிழையாது திருத்தமாக எழுதுக.

(ii) அவற்றின் பொழிப்புரையை எழுதுக.

(அ) "ஆலந் தானுகந் தமுதுசெய்..."
(ஆ) "மாறிநின் றென்னை..."
(இ) "ஆத்தாளை யெங்க ளபிராம..."
(ஈ) "உலகெ லாமுணர்ந் தோதற்..."
(உ) "விநாயகனே வெவ்வினையை..."

**3.** "இலங்கை வரலாற்றில் பொலன்னறுவைக் காலத்தில் சைவசமயம் உயர்ந்த நிலையில் காணப்பட்டது."

(i) சோழர் ஆட்சிக்காலத்தில் பொலன்னறுவை எப்பெயரில் அழைக்கப்பட்டது?

(ii) சோழர் காலத்தில், நந்தி உருவம் பொறித்த முத்திரை கண்டெடுக்கப்பட்ட இலங்கைச் சிவாலயத்தின் பெயர் என்ன? அவ்வாலயம் எங்கு உள்ளது?

(iii) பொலன்னறுவைக் காலத்தில் சிறப்புற்றிருந்த சிவாலயங்கள் **இரண்டினைப்** பற்றிச் சுருக்கமாக விளக்குக.

[பக். 6 ஐப் பார்க்க

**4.** "அறிவு நெறியை வளர்த்தவர்கள் சந்தான குரவர்கள் ஆவர்."

(i) புறச் சந்தான குரவர்கள் **நால்வரின்** பெயர்களை எழுதுக.

(ii) சித்தாந்த சாத்திர நூல்கள் எத்தனை? அவற்றுள் அருணந்தி சிவாச்சாரியர் இயற்றிய **இரண்டு** நூல்களும் எவை?

(iii) சித்தாந்த சாத்திர நூல்களுள் மணி முடியாய் விளங்கும் சிவஞானபோதம் பற்றிச் சுருக்கமாக விளக்குக.

**5.** "திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார்."

(i) திருவாசகத்தில் எத்தனை பதிகங்கள் உள்ளன? அவற்றை இயற்றியவர் யார்?

(ii) திருவாசக. ஏட்டின் ஈற்றில் இறைவனின் கையொப்பம் எவ்வாறு இடப்பட்டிருந்தது?

(iii) சைவ வாழ்வியலில் திருவாசகம் ஓதப்படும் முக்கியமான **மூன்று** சந்தர்ப்பங்களைத் தருக.

**6.** "எளிய நல் தீபம் இடல் மலர் கொய்தல்
அளியின் மெழுகல் அதுதூர்த்தல் வாழ்த்தல்
பளிபணி பற்றல் பன்மஞ்சனம் ஆதி
தளி தொழில் செய்வது தான் தாச மார்க்கமே" - திருமந்திரம்

(i) சரியை நெறியில் நிற்போர் கடைப்பிடிக்கும் மார்க்கத்தையும் முத்தியையும் தருக.

(ii) சரியை நெறியில் நின்ற **மூன்று** நாயன்மார்களின் பெயர்களைக் குறிப்பிடுக.

(iii) சரியைத் தொண்டுகள் பற்றிச் சுருக்கமாக விளக்குக.

**7.** மேல்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டிற்குச்** சிறுகுறிப்பு எழுதுக.

(i) சுந்தரமூர்த்தி நாயனாரது சமூகப்பணிகள்

(ii) சித்திரை வருடப்பிறப்பு

(iii) சைவ வித்யா விருத்திச் சங்கம்

(iv) சைவ வாழ்வில் மனிதநேயம்

(v) மாமாங்கப் பிள்ளையார் ஆலயம்

***